**சிவகஙகை நகராட்சி**

**சிவகஙகை மாவட்டம்**

**2018–2019ம் ஆண்டு நிர்வாக அறிக்கை**

**அமைப்பும் ஆட்சியும்**

| | | |
|---|---|---|
| 1. | நகராட்சியின் பெயர் | சிவகஙகை |
| 2. | நிலை | முதலாம் நிலை |
| 3. | விஸ்தீரணம் | 6.97 சதுர கிலோ மீட்டர் |
| 4. | மக்கள் தொகை | 2011 கணக்குப்படி 40,403<br>ஆண்..20,299<br>பெண்..20,104 |

**5. எல்லை**

சிவகஙகை மேலூர் சலையில் 1–வது கிலோ மீட்டர் கல்லில் ஆரம்பமாகி வடக்கு நோக்கி ஓடைமடம் வழியாக சிவகஙகை திருப்பத்தூர் நெடுஞ்சாலையில் 20–வது கிலோமீட்டர் கல்லில் சேர்த்து, பிறகு சற்று கீழ் திசையில் மயானக் கரையில் வடக்கு மூலையில் உள்ள 243.00 மீட்டர் தொலைவில் உள்ள சர்வே பெரிய கல்லில் சேர்ந்து, பிறகு சற்று தென்திசை நோக்கி 3.98 கி.மீட்டர் தொலைவில் உள்ள பெரிய சர்வே கல்லில் நேரடியாக எல்லைக் கோடு செல்கிறது. பிறகு கீழ்திசை நோக்கி திருவாடஉடப்பு புதூருக்கு தெற்கே உள்ள 533.400 மீட்டர் தொலைவில் உள்ள பெரிய சர்வே ரயில்வே கல்லை அடைகிறது.

**கிழக்கு**

மேற்கண்ட இடத்திலிருந்து தெற்காக மதுரை – தொண்டி ரோட்டில் உள்ள ஸ்டோர் 44/6 என்ற இடத்தை அடைந்து பிறகு, மீண்டும் தெற்கு திசையில் ரயில்வே குறுக்கு ரோடு இளையான்குடி ரோடு சந்திப்பில் நேராகச் செல்விகறது.

**மேற்கு**

மானாமதுரை – சிவகஙகை ரோட்டில், 211/4, கிலோமீட்டர் கல்லுக்கு, மேற்கே, 16.9 மீட்டர் தொலைவில் நடப்பட்ட பெரிய சர்வே கல்லில் சேர்த்து, பிறகு கொட்டகுடி கண்மாய் தீட்சகர் மடம் முன்பாக பிள்ளையார் கோவில் பிளாட்பாரத்தை அடைந்து, எல்லைக்கே மீண்டும் சிவகஙகை மேலூர் நெடுஞ்சாலை ஆரம்ப இடத்தை அடைகிறது.

சிவகஙகை 1–4–65 முதல் ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 27–1–65ம் தேதிய 195 நிர் அரசாணையின் படி மூன்றாம் நிலை நகராட்சியாக ஆக்கப்பட்டது. பின் 17–4–84ம் தேதிய ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அரசாணை எண்..599–ன்படி 17–4–8ம் தேதி முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், அரசாணை நிலை எண்..85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை 22–5–98ன் படி முதல்நிலை நகராட்சியாக உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**6.நகர்மன்றம்**

இந்நகரில் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர்கள் இல்லை.

பெண்கள் பொது வார்டுகள்..4,8,9,10,12,13,14,16,18,19,20,24

பொது வார்டுகள்..1,2,5,6,7,11,15,17,21,22,23,27

**நகர்மன்ற கூட்டஙகள்**

அறிக்கையாண்டில் நடைபெற்ற நகர்மன்ற கூட்டஙகளின் விபரஙகளும், மன்றத்தின் முன் வைக்கப்பட்ட மற்றும் மன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு

| | மன்றத்தால் கூட்டப்பட்ட கூட்டம் | மொத்த பொருட்கள் | முடிவு செய்த மொத்தப் பொருட்கள். |
|---|---|---|---|
| 01–04–2018 முதல் 31–03–2019 முடிய | | | |
| சாதாரணக்கூட்டம் | 12 | 184 | 184 |
| அவசரக்கூட்டம் | இல்லை | இல்லை | இல்லை |
| சிறப்புக்கூட்டம் | 1 | 1 | 1 |
| மொத்தம் | 13 | 185 | 185 |

**8. அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு நகராட்சி ஆணையாளர்கள் பணியாற்றினர்.**

திரு. பா.அய்யனார் 01.04.2018 முதல் 10.04.2018 வரை

திரு. ந.புகழேந்தி 11.01.2018 முதல் 24.06.2018 வரை

திரு. பி.அயூப்கான் 25.06.2018 முதல் 30.03.2019 வரை

9. அறிக்கையில் கோவையில் உள்ள தமிழ்நாடு நகர் நிர்வாகப் பயிற்சி நிலையத்திற்கு ரூ.25000/– நிர்வாகப் பஙகுத் தொகையாக செலுத்தப்பட்டுள்ளது.

**10. நிர்வாகம்**

ஆணையாளரின் கீழ் அரசினால் அஙகீகரிக்கப்பட்ட கீழ்க்கண்ட பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

| வ.எண் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மேலாளர் | 1 (காலியிடம்) |
| 2. | கணக்கர் (உதவியாளர் நிலையில்) | 1 |
| 3. | சத்துணவு திட்ட உதவியாளர் மற்றும் கணக்கர் | 1 (5+9) சத்துணவுத் திட்டம் |
| 4. | இளநிலை உதவியாளர்கள் | 7 (காலிபணியிடம் –2) |
| 5. | தட்டச்சர் | 1 (காலியிடம்) |
| 6. | கணினி உதவி திட்ட அமைப்பாளர் | 1 |
| 7. | பதிவறை எழுத்தர் | 2 |
| 8. | அலுவலக உதவியாளர் | 3 |
| 9. | இரவுக்காவலர் | 1 |
| | **மொத்தம்** | **18** |

பணியாளர்கள் நியமனம், தண்டனை சம்மந்தமான விதிகள் கண்டிப்பான முறையில் அனுசரிக்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் மேல்முறையீடு செய்யக்கூடிய தண்டனைகள் வழஙகப்படவில்லை.

**11) பொறியியல் பிரிவின் விபரம்**

இந்நகராட்சியில் நகர்மன்ற பொறியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு நகர் அபிவிருத்தி மற்றும் தண்ணீர் விநியோக வேலைகளைக் கவனித்து வருகிறார். இந்நகராட்சி மாவட்ட தலைநகரமான உள்ளபடியாலும், அபிவிருத்தி வேலைகள் அதிக அளவு செயல்படுத்த வேண்டியுள்ளதாலும், பொறியியல் பிரிவு பணியாளர்கள் போதுமானதாக இல்லை.

| வ.எண் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நகராட்சி பொறியாளர் | 1 |
| 2. | பணி மேற்பார்வையாளர் | 1 |
| 3. | பணி ஆய்வர் | 1 |

**12) சாலைகள்**

இந்நகராட்சி சாலைகளின் மொத்த நீளம் 46.020 கி.மீ அவைகள் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சிமெண்ட் 6.621 கி.மீ
தார் 39.329 கி.மீ
மொத்தம் 46.020 கி.மீ

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள பெருவழித் துறையின் பராமரிப்பில் உள்ள சாலைகளின் நீளம் 6.80 கி.மீ ஆகும்.

**13)பேருந்து நிலையம்**

இந்நகராட்சியில் ஒரு பேருந்து நிலையம் புதிதாக ரூ.140.00 லட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட வசதியுடன் கட்டி முடிக்கப்பட்டு பேருந்து நிலையம் பொதுமக்களின் உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. பேருந்து நிலையத்திற்குள் கீழ்க்கண்டுள்ள கடைகள் கட்டப்பட்டு பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சைவ உணவு விடுதி | 1 |
| 2. | அசைவ உணவு விடுதி | 1 |
| 3. | கடைகள் | 21 |
| 4. | புக்கிங ரூம் | 1 |
| 5. | பூக்கடை | 2 |
| 6. | கட்டணக் கழிப்பறை | 3 |
| 7. | இலவசக் கழிப்பறை | 1 |

பொது மக்கள் தஙகுவதற்காக பேருந்து நிலையத்தில் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியில் பயணிகள் தஙகும் இடம் உள்ளது. மேற்கண்டுள்ள பேருந்து நிலையம் சிவகஙகையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அவர்களின் மூலம் அஙகீகரிக்கப்பட்டுள்ளது.

**14. பயணியர் விடுதி**

இல்லை

**15. சத்திரஙகளும் தண்ணீர் பந்தலும்**

இல்லை

**16. தளவாட சாமான்கள்**

1. தென்னை கூட்டுமார்
2. மண்தள்ளும் பிரஸ்
3. மண்வெட்டி
4. குந்தாலம்
5. கடப்பாறை
6. முள்தோட்டி
7.கழிப்பறை கழுவும் பிரஸ்

**17.விளக்குகள்**

இந்நகராட்சியில் அறிக்கையாண்டில் 4 அடி குழல் விளக்கு 1350ம் 12 உயர்கோபுர மின் விளக்கும் பராமரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1–10–90 முதல் மின் விளக்குகளின் முழுபராமரிப்பும், நகராட்சி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளைக் கவனிக்க இரண்டு வயர்மேனும், மூன்று ஹெல்பர்களும் நியமிக்கப்பட்டு உள்ளார்கள். அறிக்கையாண்டில் மின் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின்கட்டணம் அனைத்து நிலுவையில் உள்ளது.

**18. உயர்நிலைப் பள்ளிகள்**

இந்நகராட்சியில் உயர்நிலைப் பள்ளிகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

**2. ஆரம்பக் கல்வி**

இந்நகராட்சியில் நிர்வாகிக்கப்பட்டு வந்த மூன்று ஆரம்பப் பள்ளிகளும் 1–1–90 முதல் கல்வி இலாகாவில பராமரிப்புக்கு மாற்றப்பட்டுள்ளது.

**19. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம்**

அரசு ஆணை எண்..1550 ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள்..09–10–92ன் படி ஏற்கனவே நகராட்சி பராமரிப்பில் இருந்து வந்த சத்துணவு வழஙகும் திட்ட நிர்வாகம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் பொறுப்பின் கீழ் ஆணையரின் மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது. நகராட்சி மூன்று பள்ளிகளிலும் குழந்தைகளுக்கு சத்துணவு வழஙகும் பொறுப்பு பள்ளித் தலைமை ஆசிரியர்களால் பராமரிக்கப்பட்டு வந்ததை 1–2–95ம் தேதி முதல் குழந்தைகள் நல அமைப்பாளர்கள் தனியாக நியமனம் செய்யப்பட்டு, அவர்களின் பொறுப்பில் இருந்து வருகிறது. 3 பள்ளிகளில் ஒவ்வொன்றிற்கும் உதவியாளர், ஒரு சமையல்காரர் உதவியாளர் வீதம், பணிபுரிந்து வருகிறார்கள். இந்தக் கணக்குகளைப் பராமரிக்கவும், பார்க்கவும், இதற்கென ஒரு உதவியாளர் பணிபுரிந்து வருகிறார். நடப்பு ஆண்டில் தினமும் பள்ளி நாட்களில் 133 மாணவர்களுக்கு உணவு வழஙகப்பட்டு வருகிறது. விடுமுறை

நாட்களில் உணவு வழஙகப்படவில்லை. இத்திட்டத்திற்கு மேற்படி தலைப்பில் ரூ.6,80,746/– வரவும், ரூ.3,56,625/– செலவும் ஆகிறது.

**20) பொது சுகாதாரம்**

இந்நகர்மன்றத்தினால் மருந்தகசாலையோ, மருந்தகமோ பாராமரிக்கப்படவில்லை.

அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட பணியாளர்கள் வேலை பார்த்து வந்தனர்.

| வ.எண் | பதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துப்புரவு அலுவலர் | 1 |
| 2. | மகப்பேறு உதவியாளர் | 1 |
| 3. | துப்புரவு ஆய்வாளர் | 1 |
| 4. | ஆயா | 1 |
| 5. | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 4 |
| 6. | டிப்பர் டிரைவர் | 2 |
| 7. | லாரி டிரைவர் | 3 |
| 8. | லாரி கீளினர் | 1 |
| 9. | துப்புரவு தொழிலாளர்கள் | 83(காலிப்பணியிடம்–21) |

**சுகாதார அலுவலர்**

சுகாதார அலுவலர் பதவி இந்நகராட்சியில் இல்லை. அதன்பின் இந்நகராட்சியில் உள்ள சுகாதார ஆய்வாளரின் பணியிடம் துப்புரவு அலுவலராகப் பணி உயர்வு செய்து அரசு ஆணை பிறப்பிக்கதற்கிணஙக இந்நகராட்சியில், ஒரு சுகாதார ஆய்வர் பணியிடத்தில் துப்புரவு அலுவலர் நியமித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**21)மருத்துவ படுக்கை வசதிகள் மருத்துவமனை இடவசதிகள்**

இல்லை

**22) பொது சுகாதார மேற்பார்வை**

இந்நகராட்சி சுகாதார அதிகாரி பதவி இல்லை. தற்போது துப்புரவு அலுவலர் 22.06.1990 முதல் நியமிக்கப்பட்டு சுகாதாரப் பணிகள் மேற்படியரின் நேரடிப்பார்வையிலும், ஆணையரின் மேற்பார்வையிலும் பணியாற்றி வருகிறார்கள்.

**23) பிறப்பு இறப்பு**

இந்நகராட்சி எல்லைக்குள் 748 குாந்தைகள் பிறந்துள்ளன. கடந்த ஆண்டு 635 குழந்தைகள் பிறந்துள்ளன.

**24) தொத்து நோயால் இறந்தவர்கள்**

அறிக்கையாண்டில் 211 பேர்கள் இறந்துள்ளார்கள். கடந்த ஆண்டில் 188 பேர் இறந்துள்ளார்கள். இறந்தவர்களின் விகிதம் ஆயிரத்திற்கு 6 ஆகும்.

1. காய்ச்சல் -- 0
2. வயிற்றுப்போக்கு -- 0
3. சஷயரோக வியாதி -- 0
4. அம்மையால் இறந்தவர்கள் -- 0
5. மற்றவர்கள் -- 211
6. அறிக்கையாண்டில் பிளேக் நோயால் இறந்தவர்கள் -- 0
7. இன்புளுயன்சா நோயால் இறந்தவர்கள் -- 0

**26) சுகாதாரம்**

ஒரு சுகாதார அலுவலரைக் கொண்டு நகரில் உள்ள சுகாதார சம்மந்தப்பட்ட வேலைகளும் கவனிக்கப்பட்டு வருகிறது. ஒரு சுகாதார ஆய்வர் மற்றும் நான்கு துப்புரவு மேற்பார்வையாளர்கள் சுகாதார ஆய்வருக்கு உதவியாக இருந்து வருகிறார்கள். இந்நகராட்சியில் 13 பொதுக் கழிப்பறைகள் மற்றும் 9 சமுதாயக் கழிப்பறைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் திறந்த வெளியில் மலம் கழிப்பவர்கள் எவரும் இல்லை.

**27)கலப்பு உரம்**

சிவகஙகை நகராட்சி எல்லைக்குள் தினசரி உருவாகும் 18 டன் குப்பையில் 8.8 டன் மக்கும் குப்பை உருவாகின்றது. மேற்படி மக்கும் குப்பையிலிருந்து உயிர் உரம் தயாரிக்கும் கூடஙகள் கீழ்க்கண்ட இடஙகளில் கட்டப்பட்டு வருகிறது.

1. சுண்ணாம்பு காளவாசல்
2. மானாமதுரை ரோடு மின்மயானக்கூடம்

மேலும் மருதுபாண்டியர் நகரில் கட்டப்பட்டுள்ள உயிர் உரம் தயாரிக்கும் கூடம் கடந்த 15.06.2019ம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது. நகரில் உள்ள 13 பூஙகாக்கள் உருவாகும் மக்கும் குப்பையிலிருந்து உயிர் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**28)வாகன வசதிகள்**

1.காம்பேக்டர் – 1

2.டம்பர் பிளேசர் – 60

3.டிப்பர் – 2

4.தள்ளுவண்டிகள் – 55

தற்பொழுது பேட்டரிகள் இயஙகும் குப்பை வாஙக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வாகனஙகள் விநியோகம் செய்யப்படவுள்ளது.

29) இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள 14093 வீடுகள் 1406 வீடுகளுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன கழிப்பறைகள் உள்ளன. மேலும் 899 வீடுகளுக்கு தனிநபர் கழிப்பறைகள் நகராட்சி மூலம் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.

30) <u>அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில் உரிமம்</u>

நகராட்சி எல்லைக்குள், விண்ணப்பம் செய்யும் வியாபாரிகளிடம் இருந்து அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான எல்லா தொழில்களுக்கும், நகராட்சி சட்டப்பிரிவு 249,250,259 படி உரிமம் வழஙகப்பட்டு வருகிறது. அ) பாராளுமன்ற உறுப்பினர் நிதி உதவி திட்டம்.

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பெரியார் நகர் 2வது தெருவில் மினி பவர் பம்ப் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் கலெக்டர் அலுவலகம் அருகில் உள்ள மின் கோபுர விளக்கு ரூ.8.00 லட்சம் மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டுள்ளது.

<u>32) பலவகைப்பட்ட வருமானஙகள் (சந்தை)</u>

அறிக்கை ஆண்டில் சந்தைகளை ஏலத்தில் விடப்பட்டதில் ஏலத்திற்கு சென்றுள்ளது.

<u>ஆடறுப்புமனை</u>

இந்நகர் 7 வது வார்டு தெற்கு மார்க்கெட்டில் ஒரு ஆடறுப்புமனை உள்ளது.அதை குத்தகைக்கு விடப்பட்டு வருகிறது. கால்நடை உதவி மருத்துவர் மேற்பார்வையில் ஆடுகள் பரிசோதிக்கப்பட்டு, அதன் பிறகு அறுக்கப்பட்டு பின் முத்திரையிட்டு வருகிறது.

<u>33) சிவகஙகை குடிநீர்த்திட்டம்</u>

அரசின் 13.01.1973 ம் தேதிய அரசு ஆணை எண்.1251 ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும், சிவகஙகை நகராட்சியியும் மற்றும் 6 வழிப்புற கிராமஙகளுக்கும் சேர்த்து ரூ.49.74 லட்சம் செலவில் ஆனகுடிநீர் திட்ட விநியோகத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளத.மேற்படி திட்டம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கடனுதவியிலும் அரசுக் கடனுதவியிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கு அரசுக் கடன் ர.16.17 லட்சம் ஆயுட்காப்பீட்டுக் கழகக் கடன் ரூ.33.37 லட்சம் ஆக மொத்தம் ர.49.54 லட்சம் கடன் வாஙகப்பட்டு அத்தொகை முழுவதும் இத்திட்டம் குடிநீர் வாரியத்தினால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

| வ.எண். | முதவி | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | குடிநீர் திட்ட கண்காணிப்பாளர் | 1 |
| 2 | மின் பணியாளர் நிலை | 4(காலிபணியிடம் – 2) |
| 3 | பொருத்துநர் | 1 |
| 4 | ஊரணி காவலர் | 7 |
| 5 | துலக்குநர் | 1 |
| 6 | மின் கம்பி உதவியாளர் | 3 |
| | மொத்தம் | 18 |

<u>34) திடக்கழிவு மேலாண்மை திட்டம்</u>

அறிக்கை ஆண்டில் தூய்மை பாரத இயக்கம் 2018 – 2019 திட்டத்தின் கீழ் தலா ரூ.49.00 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று இடஙகளில் நுண் உரமாக்கும் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் ரூ.43.20 லட்சம் மதிப்பீட்டில் 24 எண்ணிக்கை பேட்டரியால் இயக்கும் வாஙகும் பணியில் 12 எண்ணிக்கை வாஙகப்பட்டுள்ளது.

**35) கலையரஙகம்**

இந்நகராட்சியில் சண்முகராஜா கலையரஙகம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் கலையரஙகம் பொதுமக்கள் வசதிக்காக பொதுக் கூட்டஙகளுக்கு வாடகைக்கு விடப்படுகிறது.

**36) பொது சுகாதாரம்**

தேவையான சுகாதார வசதிகள் பொது மக்களுக்கு அறிக்கை ஆண்டில் திருப்திகாரமாகச் செய்யப்பட்டுள்ளது.

துப்புரவுத் தொழில்ாளர்களின் வாழ்க்கை தரம் நன்றாக உள்ளது. வேலையில் பூரணமாக ஒத்துழைத்தார்கள்.துப்புரவு தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்பட்டு அவைகள் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

**37) பயன்தரத்தக்க தொழில்கள்**

இந்நகராட்சியில் கீழ் ஒரு வாரச்சந்தையும், ஒரு தினசரி சந்தையும் ஒரு ஆடறுப்பு மனையும், ஒரு பேருந்து நிலையமும் இருந்து வருகிறது. மற்றும் மத்திய ஒருஙகிணைந்த நகர் அபிவிருத்தித் திட்டத்தில் கட்டப்பட்ட கடைகளை ஏலம் விட்டும் கிட்டஙகிளை வாடகைக்கு கொடுக்கப்பட்டும் வருமானம் பெறப்பட்டு வருகிறது.

**38) பூஙகாக்கள்**

இந்நகராட்சியில் 23 பூஙகா மற்றும் திறவுடஙகள் உள்ளது. இராமசந்திரன் நினைவு பூஙகா நகராட்சியில் பாரமரிக்கப்பட்டு வருகிறது. ஒரு தோட்ட பாதுகாவலர் வேலை செய்து வருகிறார்.ஆர்.எஸ்.வி.ஒய் திட்டத்தின் கீழ் ஆறு பூஙகாக்கள் அழகுற அமைக்கப்பட்டு வஙகிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனஙகளின் ஒத்துழைப்புடன் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

39) வருவாய் கணக்கு

இந்நகராட்சியில் சொத்து வரி விகிதப்படி 01.10.1998 முதல் ஆண்டுகளுக்கு 15.25சதவிகிதமாக வசூலித்து வரப்படுகிறது.

1. பொது காரியஙகளுக்கான வரி 7%
2. குடிநீர் வரி 5.5%
3. நூலக வரி 1.25%

40)வரவு செலவு

அறிக்கை ஆண்டில் வரவு ரூ.72713693/— வரவாகவும், ரூ.67578712/— செலவாகவும் உள்ளது. முடிவில் ரூ.5134981/— முடிவு இருப்பாக உள்ளது.

41) வழக்குகள்

இந்நகராட்சி அறிக்கை ஆண்டில் ஆரம்பத்தில் 12 வழக்குகள் நிலுவையில் இருந்தன. நடப்பு ஆண்டில் 3 வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இறுதி வரை 15 வழக்குகள் ஏதும் முடிக்கப்படவில்லை. விரைவில் முடிவு எடுக்கத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

42) தணிக்கை அறிக்கை

| வ.எண் | ஆண்டு | நிலுவையிலுள்ள பத்திகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 1994–1995 | 1 |
| 2. | 1997–198 | 7 |
| 3. | 1998–1999 | 2 |
| 4. | 1999–2000 | 4 |
| 5. | 2000–2001 | 8 |
| 6. | 2001–2002 | 29 |
| 7. | 2002–2003 | 35 |
| 8. | 2003–2004 | 5 |
| 9. | 2004–2005 | 12 |
| 10. | 2005–2006 | 11 |
| 11. | 2006–2007 | 32 |
| 12. | 2007–2008 | 40 |
| 13. | 2008–2009 | 34 |
| 14. | 2009–2010 | 22 |
| 15. | 2010–2011 | 35 |
| 16. | 2011–2012 | 47 |
| 17. | 2012–2013 | 42 |
| 18. | 2013–2014 | 33 |
| 19. | 2014–2015 | 44 |
| 20. | 2015–2016 | 52 |
| 21. | 2016–2017 | 95 |
| 22. | 2017–2018 | 82 |
| 23. | 2018–2019 | 26 |
| | மொத்தம் | 698 |

ஆணையாளர்
சிவகஙகை நகராட்சி